## அகதிகளின் தொகை அறுபதாயிரமாக அதிகரிப்பு

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து தமிழ் நாட்டுக்கு வரும் அகதிகளின் தொகை மேலும் அதிகரித்து வருகிறது. நேற்று வடக்கிலிருந்து வந்த ஆயிரத்து அறுநூறு தமிழ் அகதிகளுடன் கடந்த சுமார் இரண்டு வாரங்களில் தமிழ் நாட்டுக்கு அறுபதாயிரம் தமிழ்மக்கள் அகதிகளாக வந்துசேர்ந்துள்ளனர். (4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலால் போர் விமானம் சேதம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகர்மீது நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் கண் மூடித்தனமாகக் குண்டு வீசித் தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா விமானப் படையைச் சேர்ந்த குண்டுவீச்சு விமானங்களில் ஒன்று விடுதலைப் புலிகள் நடத்திய எதிர்த் (4ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04

விலை ரூபா: 3·00

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஆடி மீ 21 ஆம் உ திங்கட்கிழமை (06 - 08 - 1990) ஹிஜ்ரி 1410 முஹறம் 14 ஓசை 169

## ஹெலி தவறவிட்ட இரண்டுராணுவத்தினர்

(மாங்குளம்)

ஹெலியில் இருந்து மன்னாகுளத்தில் இறக்கப் பட்ட இராணுவத்தைத் திருப்பி ஏற்றிச் செல்லும் போது இரு இராணுவத்தினரை விட்டுச் சென்று விட்டனர்.

கடந்த முதலாம் திகதியன்று மன்னாகுளத்தில் ஹெலி மூலம் சிங்கள இராணுவத்தினர் பலர் இறக்கி விடப்பட்டனர். (4ஆம் பக்கம் பார்க்க)

## சிறீலங்கா விமானப்படை இரவு பகலாக யாழ். குடாநாட்டை அழித்து வருகிறது

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டையே அழித்து விடுவதுபோல் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் மிகப்பெருந் தாக்குதலை நடத்தி வருகின்றன.

பத்துநாட்கள் காலக்கெடு வென்றும் இருபத்திநான்கு மணிநேரகாலக்கெடுவென்றும் பல காலவரையறைகளைப் போட்டது இருந்தும் கடந்த இருபத்திநான்கு மணிநேரமாக குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தனது முழுப்பலத்தையும் பிரயோகித்து அகோரத் தாக்குதலை இந்தச் செய்தி அச்சுக்குப் போகும்வரை நடாத்தியவண்ணம் உள்ளது.

குறிப்பாக யாழ். நகரை விமானங்கள், ஹெலிகப்ரர்கள் இரவு பகலாக குண்டுகளை வீசி எஞ்சியுள்ள வீடுகளையும் தரை மட்டமாக்கி வருகின்றன. நகரின் மத்தியில் இருந்த பல முக்கிய கட்டட (4 ஆம் பக்கம் பார்க்க)

# கோட்டை முகாம் தாக்குதல்;

# 28 புலிகள் வீர மரணம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை இராணுவ முகாம் மீது சனிக்கிழமை நள்ளிரவு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை மூண்டது. சிறிலங்கா இராணுவத்தினருக்கு உதவியாக விமானப்படை விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் விடுதலைப் புலிகள் மீது பல மணி நேரத் தொடர்ச்சியான கடும் தாக்குதலை மேற்கொண்டன. நள்ளிரவு தொடங்கி காலை வரை நடைபெற்ற இக் கடும் சண்டையில் விடுதலைப் புலிகள் தரப்பில் இருபத்தெட்டுப் பேர் வீர மரணமடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். சிறிலங்கா இராணுவ தரப்பிலான சேதவிபரம் தெரியவில்லை. (4ஆம் பக்கம் பார்க்க)

### இரத்ததானம்செய்ய முண்டியடிப்பு

(மானிப்பாய்)

கோட்டை முகாம்தாக்குதலில்காயமடைந்தவிடுதலைப் புலிகளுக்கு இரத்ததானம் செய்யவென ஆண்கள் பெண்கள்வயது வந்தவர்கள் எனபெருந்தொகையான தமிழீழமக் (4ஆம் பக்கம் பார்க்க)

### 1பெண்பலி7பேர்காயம்

(தம்பலகாமம்)

கிண்ணியா, பானாறு, தம்பலகாமம் ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து உப்பாறு (4ஆம் பக்கம் பார்க்க)

### உங்கள் புதைகுழிகள் உயிர்பெறும்

எதிரியின் காவல் அரண்களைத் தாண்டி
ஏறி நடந்தீர்!
எதிரியின் கோட்டை மதில்களில் ஏறி
எழுந்து நிமிர்ந்தீர்!
புலியெனப் பாய்ந்து புறச்சுவர் கடந்து
புகுந்து மடிந்தீர்
போர்க்களம் ஆடிப் புதியதோர் பரணி
பிறந்திடச் செய்தீர்
விழுந்த வேங்கைகளே
புதைகுழியில் தூங்குங்கள்!
பொழுது விடியும்
கோடடைக் கதவுகள் உடையும்
பாயும் புலிகள் பகைமுடிப்பர்
உங்கள் புதைகுழிகள் உயிர்பெறும்!
நீங்கள்
விழுந்தவர்களே அல்ல
எழுந்தவர்கள்!
நாளை பிறந்திடும் காலை எமக்கொரு
சேதி வழங்கும்-இங்கு
நீளக் கிடக்கின்ற ஈழம் எமக்
கென நீதி பிறக்கும்!

## விளாத்திக்குள மோதலில் 10 இராணுவத்தினர் மரணம்

(ஓமந்தை)

ஓமந்தை விளாத்திக்குளப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் ஏற்பட்ட நேரடி மோதலில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் இரண்டு போராளிகள் வீர மரணமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 4 ஆம் திகதி பகல் 12 மணியளவில் நடைபெற்றது.

விடுதலைப்புலிகள் தரப்பில் ஜெசி' றொகான் ஆகிய இரு போராளிகள் வீர மரணத்தைத் தழுவிக்கொண்டனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர். (ம)

## மன்னாரில் முகாம்கள் மீது புலிகள் ஷெல் தாக்குதல்

(மன்னார்)

மன்னார் ஆலங்குளம் இராணுவமுகாம்மீது கடந்த 4ஆம் திகதியன்றுவிடுதலைப்புலிகள் மோட்டார் ஷெல் தாக்குதல் மேற்கொண்டிருந்தனர்.

மேலும் அன்றுமாலை 4.30 மணிக்கு 10 ஆம் கட்டை ராணுவ முகாம்மீதும் விடுதலைப்புலிகள் மோட்டார் ஷெல் தாக்குதல் மேற்கொண்டிருந்தனர்.

இதன் பின்னர் 10 ஆம் கட்டை ராணுவமுகாமைச் சூழவுள்ள பல பகுதிகளிலும் ஸ்ரீ (4ஆம் பக்கம் பார்க்க)

## காத்தான்குடியில் முஸ்லிம்கள் கொலை அரசின் திட்டமிட்ட சதி

அண்மையில் முஸ்லிம் நாடுகளுக்கு ஆயுதம் வாங்க சிறிலங்கா அரசு தனது பாதுகாப்பு இணை அமைச்சரை அனுப்பியது. அதேவேளை தமிழீழத்திலும் இலங்கைத் தீவின் தென்பகுதியிலும் அரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன. இதனால் பல நாடுகள் சிங்கள அரசுக்கு ஆயுதம் வழங்க மறுத்து வருகின்றன என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியால் நேற்று விடுத்த அறிக்கையில் கூறப்படுகிறது. மேலும் அவ்வறிக்கையில் அரபு நாடுகளிடம் நிதியும் ஆயுதமும் பெற சிங்கள அரசு பல நாடகங்களை ஆடுகின்றது. முதலில் இலங்கையிலிருந்து இஸ்ரேலிய நலன்புரி அமைப்பை மூடியது. இப்போது திட்டமிட்டு முஸ்லிம் மக்களைக் கொலை செய்து விட்டு பழி (4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### காணவில்லை

தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தில் வேலை செய்யும், உமையாள்புரத்தைச் சேர்ந்த ஐயாத்துரை சுப்பிரமணியம் என்பவரை 28 . 07 . 90 அன்றிலிருந்து காணவில்லை. இவரைக் கண்டவர்கள் கீழுள்ள முகவரிக்கு தகவல் தரவும். யோ. அலோசியஸ் C/Oயக்கரசு 3ஆம் கட்டை ஆனைக் கோட்டை (R/567)

### பொதுக்கூட்டம்

தமிழ்பேசும் மாணவர் ஒன்றியத்தினால் பாடசாலைகளுக்கிடையில் பிரதேச ரீதியாக பொதுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 10. 00 மணிக்குப் பின்வரும் பாடசாலைகளில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

தீவுப்பகுதிக்கான கூட்டம் வேலணை மத்திய கல்லூரியிலும், தென்மராட்சிக்கான கூட்டம் சாவகச்சேரி றிபேக் கல்லூரியிலும் நடைபெறும். இக்கூட்டத்திற்கு அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகளை தவறாது சமுகம் தரும்படிமேற்படி கழகம் கேட்டுக் கொண்டது.

## வடக்கு - கிழக்கு யுத்தத்தால் பொருளாதாரம் பாதிப்பு

### -டீ.பி.விஜேதுங்கா

(கண்டி)

வடக்கு கிழக்குப் பகுதியில் தற்போது தோன்றியுள்ள யுத்தத்தால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு இருப்பதாக நிதியமைச்சரும் பிரதமருமான டீ. பி. விஜேதுங்கா கண்டியில் நடந்த வைபவம் ஒன்றில் கூறினார்.

இந்த யுத்தத்தால் அரசுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் அவர் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

## ஆலயங்கள் அழிப்பு குறித்து பேரவை கண்டனம்

(கொழும்புத்துறை)

சிங்கள பௌத்த அரசாங்கம் திட்டமிட்டு இந்து ஆலயங்களை விமானக் குண்டு வீச்சுமூலம் தரைமட்டமாக்கியும், சேதப்படுத்தியும் வருகின்றது என்றும், கடந்த காலங்களில் பிறமத ஆக்கிரமிப்புக்களின் போது இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டிருந்தது போல 'பௌத்த' மத ஆக்கிரமிப்பு இப்போது மேற்கொள்ளப்படுவதாகவும், யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் துணைச் செயலாளர் திரு. சி. சி. வரதராசா கண்டனமும் கவலையும் தெரிவித்துள்ளார்.

''மட்டக்களப்பில் பல இந்துக் கோவில்கள் சேதமடைந்துள்ளன. தண்ணீரூற்றுப் பகுதியில் நடாத்தப்பட்ட விமானத் தாக்குதலினால் தண்ணீரூற்றுப் பிள்ளையார் கோவில் உட்பட ஐந்து சைவக் கோவில்கள் சேதமடைந்துள்ளன என்றும், வடமராட்சி லிபரேஷன் ஒப்பரேஷனின் போது சரித்திரப் பிரசித்தி பெற்ற தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய பாரிய சித்திரத்தேர் தீக்கிரையாக்கப்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (24)

## ஆறாம் மாத நினைவஞ்சலி



அன்னை மடியில் 09-03-1964

ஈழ மண்ணில் 06-02-1990

**செல்வன் சின்னத்தம்பி தயாளபதி**
(மேஜர் சுரேஸ்)

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

2ஆம் வட்டாரம்,
நிலாவெளி,
திருக்கோணமலை.

பெற்றோர்
சகோதரர்கள்
நண்பர்கள்

(R. 560)


## அண்ணா கோப்பி - நல்லூர்க் கிளை

**வாடிக்கையாளரின் வசதி கருதி அண்ணா கோப்பி ஸ்தாபனத்தாரின்**
உற்பத்திப் பொருட்களை நல்லூர் தேரடிக்கு முன் அமைந்துள்ள அண்ணா கோப்பிக் கிளையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(B. 1303)


## சுக மரணத்தைத் தழுவிய ஓராண்டு



## ஏ. இரத்தினலிங்கம்

(ஆசிரியரும் வர்த்தகரும்)

பலவீனர்களின் பாதையில் 'தடையாக இருக்கும் கருங்கல் பாறையை நீங்கள் தன்நம்பிக்கையுடன் படிக்கட்டுகளாக அமைத்தீர்கள்'

271/2, நாவலர் ஒழுங்கை,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,
சகோதரர்கள், மைத்துனிமார்.


நவீன சந்தையில் நவீன றெடிமேட் ஆடைகளை விற்பனை செய்யும் விஜித்திராஸ் மற்றும் நம்பர் வண் ஸ்தாபனங்கள் நல்லூர் கோபுரவாசல் முன்பு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.


(B-1308)

### சிந்தனைக்கு

மனிதர்களை உருவாக்குவது உதவிகள் அல்ல; தடைகள்தான். வசதிகள் அல்ல; சிரமங்கள்தான்.

— வில்லியம் மேத்யூஸ்


# ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 06-08-90

தொலைபேசி

ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208

த. பெ. எண் 05


## யாரை யார் பாதுகாப்பது?

தமிழ் நாட்டுக்கு இலங்கையிலிருந்து செல்லும் தமிழ் அகதிகளின் தொகை அதிகரித்து வருவதால் இலங்கையிலேயே அகதிமுகாம்கள் அமைத்து தமிழ் அகதிகளை வைத்துப் பராமரிப்பதற்கும் இதை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கண்காணிப்பதற்கும் சிறிலங்கா அரசுடன் இந்திய மத்திய அரசு ஆலோசனை நடத்தி வருகிறதாம்.

இத்தகவலை டில்லி சென்று திரும்பிய தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி தெரிவித்திருக்கிறார்.

இலங்கையிலிருந்து தமிழ் மக்கள் சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் தமிழகத்துக்குச் செல்லத் தொடங்கியதும் தமிழக முதல்வர் கவலை தெரிவித்தார்.

அகதிகளைத் திருப்பி அனுப்பினால் மன்னாரில் முகாம் அமைத்துப் பராமரிப்பதாகவும் இலங்கை அரசபடைகள் அவர்களுக்குப் பாதுகாப்பளிக்குமென்றும் சிறிலங்காவின் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்திருந்தார்.

இப்படியொரு முகாம் இலங்கையில் அமைப்பதானால் ஐ நா. அமைப்பொன்று அதைக் கண்காணிக்கவேண்டும் என்று தமிழக முதல்வர் கருணாநிதி கூறியிருந்தார்.

இதுவே இப்பொழுது சிறிலங்கா அரசுடன் இந்திய மத்திய அரசு ஆலோசனை செய்துவரும் விஷயமாக மாறியிருக்கிறது.

தமிழ் நாட்டுக்கு இலங்கையிலிருந்து தமிழ் மக்கள் பெருமளவில் அகதிகளாகச் செல்வதால் அங்கு பல பிரச்சினைகள் ஏற்படலாமென்று தமிழக அரசும் இந்திய மத்திய அரசும் கவலைப் படுவதில் நியாயமிருக்கலாம்.

இலங்கையிலிருந்து தமிழ் மக்கள் தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல எந்த நாட்டுக்கும் அகதிகளாகச் செல்வதை நாம் விரும்பவில்லை.

இதே சமயம் தமிழ் மக்கள் தங்கள் சொந்த மண்ணிலேயே அகதிகளாக அநாதைகளாக இருக்க வேண்டுமென்பதையும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

சில வருடங்களுக்கு முன்னர் அநுராதபுரத்தில் இராணுவ முகாம் ஒன்றில் தமிழ் மக்கள் அடைக்கலம்தேடி அகதிகளாகத் தங்கியிருந்த போது அங்கிருந்த சிங்கள இராணுவச் சிப்பாய் ஒருவர் திடீரென்று துப்பாக்கி எடுத்து எட்டுத் தமிழ் அகதிகளைச் சுட்டுக் கொன்றார். அந்தச் சிப்பாயை இராணுவ அதிகாரி சுட்டுக்கொல்லாமலிருந்தால் தமிழ் அகதிகள் அத்தனை பேரும் பிணமாகியிருப்பர்.

அந்தச் சிப்பாய்க்கு மனநோய் என்று கூறப்பட்டது. இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்திக்கு ஜனாதிபதி மாளிகை முன்பாக அளிக்கப்பட்ட மரியாதை அணி வகுப்பிலேயே ஒரு கடற்படைச் சிப்பாய் தாக்க முனைந்ததற்கு சூரிய வெப்பத்தினால் ஏற்பட்ட கோளாறு என்று விளக்கம் சொன்னவர்கள் ஐ. நா. மேற்பார்வையென்றாலென்ன சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கண்காணிப்பென்றால் என்ன ''மனநோய் சிப்பாய் ஒருவர்'' திடீரென்று அகதிமுகாமுக்குள் புகுந்து தமிழ் மக்களைச் சுட்டுக்கொல்லலாம்.

யாருடைய செயல்களினால் தமிழ் மக்கள் அகதிகள் ஆக்கப்பட்டார்களோ அவர்களே தமிழர்களுக்குப் பாதுகாப்பளிப்பதென்றால் இதைவிட வேடிக்கைவேறேது?

சொந்த மண்ணிலேயே தமிழ் மக்கள் அகதிகளாக இருப்பதற்குத் தமிழக அரசும் இந்திய மத்திய அரசும் சிறிலங்கா அரசுடன் ஆலோசனை நடத்திச் சிபார்சு செய்ய வேண்டுமா?

தமிழ் மக்கள் சொந்த மண்ணில் பாதுகாப்புடன் வாழ முடியாமலே தமிழகத்திற்கு சென்றார்கள். தமிழகத்திற்கு வர வேண்டாம் என தடுக்க தமிழக அரசிற்கும், இந்தியாவிற்கும் உரிமையுண்டு ஆனால் சொந்த மண்ணில் அகதிமுகாம்களின் வாழுங்கள் எனச் சொல்ல அவர்களுக்கு உரிமையில்லை.

உதவி செய்யவிரும்பினால் செய்யட்டும், செய்யாவிட்டால் அடுத்த நடவடிக்கை பற்றித் தீர்மானிக்க வேண்டியவர்கள் நாங்கள்.

## ஈராக்கிற்கு ஆயுதம் விற்பதில்லை என ஐரோப்பிய சமூக நாடுகள் முடிவு

(ரோம்)

குவைத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ள ஈராக் நாட்டுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதில்லை என்றும் ஈராக்கின் எண்ணையை கொள்முதல் செய்வதில்லைஎன்றும்ஐரோப்பிய சமூகநாடுகள் முடிவெடுத்துள்ளன.

இத்தாலியின் தலைநகரான ரோமில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐரோப்பிய சமூக மகா நாடுகளின் அவசர மகாநாட்டின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவின் தலைநகரான ரியாட்டில் இடம்பெற்ற இருபத்திரண்டு இஸ்லாமிய நாடுகள் அடங்கிய ''அரபு லீக்'' கின் அவசர உச்சிமகாநாட்டில் ஈராக்கின் ஆக்கிரமிப்பு நடவடிக்கை குறித்து பலமான கண்டனம் தெரிவிக்கப் பட்டுள்ளதுடன்; நிபந்தனைகள் எதுவுமின்றி ஈராக் தனது படைகளை குவைத்திலிருந்து வாபஸ்பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்துள்ளது.

இதேவேளை குவைத்திலிருக்கும் தமது படைகளை நேற்று ஞாயிற்றுக்கிழமை திருப்பி அழைத்துக் கொள்வதற்கு ஈராக் இணக்கம் தெரிவித்திருந்தது தெரிந்ததே. இந்த படை விலகலுக்கான இணக்கத்தை ஈராக் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளதுடன் அதன் முதல் நடவடிக்கையாக குவைத்தில் நிலைகொண்டுள்ள தமது டாங்கிகளையும், கவச வாகனங்களையும் அகற்றும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் இந்தப் படை விலகலுக்கு அமெரிக்கா உட்பட ஐரோப்பிய சமூக நாடுகளதும், ஏனைய அரபு நாடுகளதும் அச்சுறுத்தல் நடவடிக்கையே என்று அரசியல் வட்டாரங்கள் மூலம் அறியப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க சவூதி அரேபியா மீது படையெடுக்கும் அபிப்பிராயம் தமக்கு இல்லை என்றும் ஈராக் அறிவித்துள்ளது. சவூதி அரேபியா மீதும் படையெடுக்கும் நோக்குடன் ஈராக் நேற்று முன்தினம் தனது படைகளை சவூதி அரேபியாவின் எல்லைக்கு அருகாமையில் 5-10 மைல் இடைவெளிக்குள் நகர்த்தி இருந்ததும்; இச் செயலுக்கு அமெரிக்கா கடுமையான எச்சரிக்கை விடுத்திருந்ததும் தெரிந்ததே.

## இலங்கைத்தமிழரைக்காப்பாற்ற இந்தியா தவறிவிட்டது

(சென்னை) - வீரமணி

''ஸ்ரீலங்கா அரசினால் நாளாந்தம் கொல்லப்பட்டு வரும் தமிழ் மக்களைக் காப்பாற்றும் வகையில் இந்திய மத்திய அரசு தெளிவானதும், உறுதியானதுமான ஒரு நல்ல முடிவினை மேற்கொள்ளத் தவறிவிட்டது'' என்று திராவிடர் கழக பொதுச் செயலாளர் திரு. வீரமணி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மேற்படி கழகத்தின் சார்பாக சென்னையில் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் அவலநிலை குறித்து இந்திய மத்திய அரசு கடைப்பிடித்து வரும் அசமந்தப் போக்கால் தமிழக மக்கள் அதிருப்தி அடைந்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள திரு. வீரமணி இது விடயத்தில் இந்திய அரசு துரிதமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## வட இந்தியாவில் வெள்ளம் 22 லட்சம் பேர் பாதிப்பு

(பீகார்)

உத்தர பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம் ஆகிய இடங்களில் பயங்கர வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது.

கங்கை, பிரமபுத்திரா உட்பட பல நதிகளிலும் வெள்ளம் அபாய மட்டத்தை தாண்டி சென்று கொண்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதனால் இப் பிரதேசங்களில் பெரும் பீதி நிலை ஏற்பட்டுள்ளதுடன் பல கிராமங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. பயிர்கள் அழிக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து ஒரு மாதகாலமாக நீடித்து வரும் இந்த வெள்ள நிலைமையினால் ஏறக்குறைய இருபத்திரெண்டு லட்சம் மக்கள் தமது வீடு வாசல்களை இழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## அகதிகளாக வந்த தமிழரை தூதுவர் கல்பகே பார்ப்பதா? -கலைஞர் எதிர்ப்பு

(சென்னை)

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத்தமிழ் அகதிகளை இந்தியாவுக்கான இலங்கையின் தூதுவர் திரு. ஸ்டான்லி கல்பகே வந்து பார்வையிட விருப்பம் தெரிவித்துள்ளது குறித்து தமிழக முதல்வர் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

டில்லியிலிருந்து தமிழகம் திரும்பியுள்ள முதல்வர் சென்னையில் வைத்து இலங்கைத்தூதுவரின் இந்த விருப்பம் குறித்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு மன்னாரில் முகாம் அமைப்பது தொடர்பாக இந்திய மத்திய அரசு இலங்கை அரசுடனும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடனும் தொடர்புகொள்ள உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் இந்த நடவடிக்கை குறித்து தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு டில்லி பயணத்தின்போது அறிவிக்கப்பட்டுள்ளதாக இந்திய தரப்பில் கூறப்பட்டது.

### தேடப்படுகின்றனர்

(கொழும்புத்துறை)

திருக்கோணமலையில் இருந்து இடம் பெயர்ந்து கொக்குவிலில் ஸ்ரீமுருகமூர்த்தி கோயிலடியில் தங்கியுள்ள செல்வி தங்கராசா சுமதி (வயது 18). செல்வி தங்கராசா பாமதி (வயது 16)ஆகிய இருவரும் தமது பெற்றோரும் மூத்த சகோதரியும் இடம் பெயர்ந்து வரும் போது தவறிவிட்டதாக தெரிவிக்கின்றனர்.

இவர்கள் எங்கிருந்தாலும் தங்களுடன் தொடர்பு கொள்ளும் படி கேட்டுக்கொள்ளுகின்றனர். (24)

### கலந்துரையாடல்

போர்க்கால சூழலில் உணவு உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலொன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை பத்து மணிக்கு நாச்சிமார் கோயிலடி பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் சகல கிராமசேவையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ ஆய்வு நிறுவன நல்லூர் பிரதேச உணவு உற்பத்திக்குழு கேட்டுள்ளது. (மு)

## பற்றாக்குறையால் பயனற்றுப் போன விசர் நாய்க்கடி மருந்து

விசர் நாய்க்கடி தடுப்பு மருந்து இன்றி உயிராபத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்த யாழ் மாவட்ட மக்களுக்கென கொழும்பிலிருந்து கடந்த வாரம் கொண்டுவரப்பட்ட தடுப்பு மருந்தினால் ஒருவர் கூட பயனடையவில்லை என்று வைத்திய வட்டாரங்கள் அதிர்ச்சித் தகவல் தெரிவித்துள்ளன.

கொழும்பிலிருந்து 580 சி. சி. விசர் நாய்க்கடி தடுப்பு மருந்துகொண்டுவரப்பட்டது. இதில் 100 சி சி. மருந்து சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரிக்கு வழங்கப்பட்டது. மிகுதி 480 சி.சி. மருந்தே மானிப்பாயில்இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது.

விசர் நாய்க்கடி நோய்க்கு உள்ளான ஒருவருக்கு ஒரு தடவைக்கு 3 சி.சி.மூலம் 14 தடவைகள் 42சி. சி. மருந்தை ஏற்ற வேண்டும். இதன் படி480 சி. சி. மருந்தும் 11 பேருக்கு ஏற்றவே போதுமானது. ஆனால் 16 பேருக்கு இம் மருந்தை ஏற்ற ஆரம்பிக்கப் பட்டதால் ஒருவருக்குக் கூட 42 சி.சி ஏற்றி முடிக்கவில்லையாம். ஒருவருக்கு வேண்டிய மருந்தை ஏற்றி முடிக்காவிட்டால் ஏற்றிய மருந்தினாலும் பயன் எதுவும் இல்லை. அந்நோயாளிக்கும்ஒரு தடவையேனும் மருந்து ஏற்றாத நோயாளிக்கும் வித்தியாசமில்லையென்று வைத்திய வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. (75)

### கூரை பிரித்து திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவிலைச் சேர்ந்த வீடொன்றில் இரவோடிரவாக, கூரை பிரித்து தொலைக்காட்சிப் பெட்டியைத் திருடிச்சென்றுள்ள சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

25,000ரூபா பெறுமதியான இத் தொலைக்காட்சிப் பெட்டி திருட்டுச் சம்பவம் தொடர்பாக உரிமையாளர் திரு கோ. லிங்கேஸ்வரம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் புகார்செய்துள்ளார். (35

### அகதிகள் வேடத்தில் திருட்டுக் கோஷ்டி

(விசேடநிருபர்)

இரவு வேளைகளில் போதை வஸ்துப் பாவித்து விட்டு திருட்டில் ஈடுபட்டு வரும் கோஷ்டி ஒன்று யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் அகதிகள் போர்வையில் தங்கியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இக்கோஷ்டியைச் சேர்ந்த நபரொருவர் கடந்த வெள்ளிக்கிழமை ஹீரோ சைக்கிள் திருடியதை பொதுமக்கள் பிடித்து தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (21)

### அவுஸ்திரேலியா 30 லட்சம் உதவி

அவுஸ்திரேலியா முப்பது லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு அன்பளிப்பாகவழங்கியுள்ளது.

### மின் விநியோகம் சீரில்லை

(யாழ்ப்பாணம்)

தற்போது வழங்கப்படும் சுழற்சி முறையிலான மின் விநியோகம் இளவாலை பகுதிக்கு சீராக கிடைப்பதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## ஒன்பது மணி நேரம் தொடர்ச்சியாக

# யாழ். நகர்மீது விமானக் குண்டுவீச்சு!

# பலர் பலி; கடைகள், வீடுகள் சேதம்

(விசேடநிருபர்)

சனிக்கிழமை (5-8-90)இரவு 12-15 மணி தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை (6-8-90) காலை 9-15 மணிவரையான ஒன்பது மணித்தியாலங்கள் யாழ்.நகரில் தொடர்ச்சியாக பொம்மர், அவ்ரோ விமானங்களும் ஹெலிகளும் மாறி மாறிக் குண்டு பொழிந்துள்ளதில் ஒரு வயோதிப மாதும், நான்கு சிறுவர் சிறுமிகளும் கொல்லப்பட்டதுடன் பத்துக்கும் மேற்பட்டவர்கள் காயங்கள் அடைந்தனர்.

நூற்றுக்கணக்கான வீடுகள் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட கடைகள், பாடசாலைகள், கோயில்கள், அகதி முகாம்களும் சேதமடைந்தன.

மத்யூஸ் வீதி, யோசெப் பிலோமினா (வயது 54) சனிக்கிழமை இரவு அவ்ரோ விமானக் குண்டுவீச்சுக்குப் பலியானார்.

நேற்று (5-8-90) ஞாயிறு காலை 8-30 மணிக்கு பொம்மர் ரொக்கட் குண்டுத் தாக்குதலுக்கு பாஷையூர் புனித மகளிர் பாடசாலையில் தஞ்சமடைந்திருந்த குருநகரைச் சேர்ந்த நான்கு சிறுவர்கள் பலியாகினர்.

அவர்களின் விபரம் வருமாறு: கிறிஸ்ரி செல்வநாயகம் விஜிதா (வயது 11) யோகம் வினிதா (வயது 10) செல்வம் ரிக்ஷன் (வயது08) சுபாஷினி (வயது 07)

இதே நேரம் காயமடைந்த திருமதி அருளம்மா புஸ்பராணி (வயது 40)அபாயமான நிலையில் கடற்கரை வீதி திருச்சிலுவைக் கன்னியர் சுகநல நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு இவர் பின்னர் மரணமானார்.

அலோசியஸ்யூட் (வயது 20) வெலிச்சோர் அலோஷியஸ் (வயது 45)வேலுப்பிள்ளை (வயது 40) சபா (வயது 38) வில்லியம் (வயது 65) கொன்சலீஸ் (வயது 35) கொன்சலீஸ் இராசமணி (வயது 30)கொன் அலீஸ் யாழினி (வயது 08) ஆகியோர் திருச்சிலுவைசுகநல நிலையத்தில் சிகிச்சைவழங்கப்பட்டதுடன் காயங்களுடன் மானிப்பாய் அரசினர் வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

எட்டு மணித்தியாலத் தாக்குதல்களில் குருநகர் கடற்கரை வீதி, யாழ். ஆறாம் குறுக்கு வீதி, அடம்பன் வீதி, குருநகர் புதுமை மாதா கிழக்கு,மேற்கு வீதிகள், பாலவுடையார் வீதி, சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயவீதி, தண்ணீர்த்தாங்கி 1-ஆம் குறுக்கு வீதி ஆகியவற்றில் நூற்றுக்கணக்கான வீடுகள் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட கடைகள் சேதம் அடைந்தன.

குருநகர் ஐஸ்பிளான்ட் வீதி, தண்ணீர்த்தாங்கி வீதி, கொண்டடிவீதி ஆகியவற்றில் வீழ்ந்த குண்டுகள் வெடிக்காத நிலையில் காணப்பட்டன.

பாஷையூர், புனித அந்தோனியார் ஆலய முன்றல், கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அகதிகள் முகாம்களும் ரொக்கட் தாக்குதலுக்கு உள்ளாகிய போதும் எவரும் பாதிக்கப்படவில்லை என்று அறிவிக்கப்படுகிறது. (21)

### 1 பெண்பலி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிராமத்தின் மீது நேற்று மாலைஷெல் தாக்குதல்மேற்கொள்ளப்பட்டது. இந்த ஷெல் தாக்குதலில் ஒரு பெண் கொல்லப்பட்டதோடு 7 பேர் காயமடைந்தனர்.

### அகதிகளின்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாட்டுக்கு வரும் அகதிகள் தொகையைக்கட்டுப்படுத்துவதற்கும் இலங்கையிலேயே தமிழ் மக்களுக்கென அகதி முகாம் அமைப்பதற்கும் தமிழ் நாடு அரசும் இந்திய மத்திய அரசும் ஆலோசித்து வருகின்ற போதிலும் தமிழ் நாட்டுக்கு வரும் தமிழ் அகதிகளின் தொகை அதிகரித்து வருகின்றதென்றும் இதைக் கட்டுப்படுத்த முடியா திருப்பதாகவும் தமிழ் நாடு அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### இரத்த தானம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் மானிப்பாய் வைத்திய சாலையில் வரிசையில் முண்டியடித்துக் கொண்டு நிற்பதை நேற்று அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இருந்தும் சில பிரிவு இரத்தங்கள் அரிதாகவே இருந்ததாகவும் தெரிய வருகிறது. (லோ)

### புலிகளின்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலில் சேதமடைந்து புகை கக்கியபடி ஆட்டம் கண்டு பலாலி விமான நிலையத்துக்குத் திரும்பிச் சென்றது.

''விமானம் சேதமடைந்து விட்டதுதான். ஆனால் ஒரு குண்டு இன்னமும்இருப்பதால் பலாலி விமான நிலையத்தில் போய் இதனுடன் இறங்குவது ஆபத்து'' என்று விமானி கூறவும் அப்படியானால் அந்த ஒரு குண்டையும் யாழ். நூல் நிலையக் கட்டிடத்தின் மீது போட்டுவிடு'' என்று பதில் வந்தது. குண்டு வீசப்பட்டது விமானம் புகையுடன் திரும்பிச் சென்றது.


## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

### நிர்வாக சபைக் கூட்டம்

இடம்: யூனிவேர்சல், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
காலம்: 07 - 08 - 90 (செவ்வாய்) காலை 10 மணி

நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

### பொதுச் சபைக் கூட்டம்

இடம்; யாழ் - நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலை (யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அருகாமையில்)
காலம்: 9 - 8 - 90 (வியாழன்) காலை 10 மணி

பொதுச் சபை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

—செயலாளர்

(B 1309)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## செட்டிகுளம் ராணுவமுகாமிற்கு ஹெலிமூலம் பொட்டலங்கள்

(வவுனியா)

செட்டிகுளம் இராணுவ முகாமில் உணவுப்பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் ஹெலிகொப்ரரிலிருந்து ஆகாயமார்க்கமாக இம்முகாமுக்குள் பொதிகள் போடப்பட்டு வருகின்றன.

கடந்த ஜூன் மாத இறுதிப்பகுதியில் மதவாச்சியிலிருந்து தரைமார்க்கமாக வந்த படையினரின் வாகனங்களில் உணவுப்பொருள்கள் கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதை அடுத்துஇதுவரை தரைமார்க்கமாக உணவுப் பொருள்கள் எவையும் கொண்டுவரப்படவில்லை.

தினமும் ஹெலியிலிருந்து போடப்படும் உணவுப் பொதிகள் பல முகாமுக்கு வெளியேயும் விழுவதாகவும் கூறப்பட்டது. (தி)

### மன்னாரில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லங்கா ராணுவத்தினர் ஹெலி மூலம் தாக்குதல் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலின் போது சிங்கள ராணுவத்தினர் தரப்பில் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை. (ம)

### காத்தான் குடியில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யைத் தமிழீழவிடுதலைப்புலிகள்மீது சுமத்துகின்றது.

விடுதலைப்புலிகள் முஸ்லிம் மக்களை கொல்கின்றார்கள். அவர்களை எதிர்த்துப் போராட ஆயுதம் வேண்டும் என அரபு நாடுகளில் ஆயுதங்களைப் பெறலாம் என சிங்கள அரசு திட்டமிட்டு செயல்பட்டு வருகின்றது.

தமிழ் முஸ்லிம் மக்களை பிரித்து தமிழ் பேசும் மக்களை அழிக்கவும் சிங்கள அரசு திட்டமிட்டு செயல் படுகின்றது.

சிங்கள அரசின் இத்திட்டத்திற்கு முஸ்லிம் மக்களின் தலைவர்கள் என தம்மைக் கூறிக் கொண்டு பதவிக்காக எம் அற்ப சலுகைக்காகவும் சிங்கள அரசோடு ஒட்டிக் கொண்டிருக்கும் சிலர் துணை போகின்றனர்.

இஸ்ரேலின் மொசாட் அமைப்பை சிறிலங்காவுக்கு ஐக்கிய தேசிய கட்சிஅழைத்த போது 1981 தை 21 ஆம் திகதி மொசாட்டின் முகவர் திஅவ்ர கூ காம் ஜோசப் உடன் பேச்சு வார்த்தை நடாத்தியவர் இன்றைய சிறிலங்காவின் பாராளுமன்ற சபாநாயகர் எம். எச்.முகமது. இவர் இன்று விடுதலைப்புலிகளுக்கு இஸ்ரேல் உதவி செய்து வருகின்றது என கூறிவருவது குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் மக்கள் திட்டமிட்டு சிங்கள மக்களால் கொல்லப்பட்டு வருகிறார்கள். அவர்கள் மண்ணில் இருந்து அவர்கள் விரட்டப்படுகின்றார்கள். இது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஸ்ரப்போ அல்லது அரசில் இருக்கும்எந்த முஸ்லிம் அமைச்சர்களோ குரல் கொடுத்ததுகிடையாது.

முஸ்லிம்மக்கள் பெரும்பான்மையாக வாழும் அம்பாறை மாவட்டத்தை சிங்கள அரசு சிங்கள மாவட்டமாகப்பிரகடனப்படுத்தியுள்ளது.

அத்துடன் அங்கு பெருமளவில் சிங்களவர்களைக் குடியேற்றுகின்றது. அங்குள்ள அரசாங்க அதிபர்கூட ஒரு சிங்களவர்.

இப்படிச் செயற்படும் அரசு இன்று தாம் தமிழ் முஸ்லிம் மக்களுக்குஎதிராக நடாத்தும் இனப்படுகொலையை நியாயப் படுத்தும் குழுவுக்குத் தலைவராக ஒரு சிங்களவரை அனுப்பாது முஸ்லிமான எம். எச். முகமதுவை அனுப்புகிறது.

சிங்கள அரசானது முஸ்லிம் ஊர்காவல் படையைக் கொண்டு தமிழர்களைக் கொல்கின்றது. தனது கூலிப் படைகளைக் கொண்டு முஸலிம்களைக் கொல்கின்றது. இதன்மூலம் தமிழ் முஸ்லிம் மக்களைப் பிரித்தழிக்க முயல்கின்றது.

முஸ்லிம்களின் கொலையை விடுதலைப்புலிகள் மேல் சுமத்துவதன் மூலம் தனது இனப்படுகொலையைசிலதுரோகிகளின் துணையோடு நியாயப்படுத்துவதன் மூலம் அரபுநாடுகளிடம் இருந்து நிதியையும் ஆயுதங்களையும் பெற நினைக்கிறது.

சிங்கள அரசின் இத்திட்டமிட்ட சதியைத் தமிழ் முஸ்லிம் மக்கள் புரிந்து கொள்ளல் வேண்டும்.

எமக்கும் காத்தான் குடியில் நடைபெற்றகொலைகளுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது.

### ஹெலி தவறவிட்ட

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறிது நேரத்தின் பின்னர் அவர்கள் மீண்டும் ஹெலியில் ஏற்றப்பட்டனர் இதன்போது இரண்டு இராணுவத்தினரைத் தவற விட்ட நிலையில் ஹெலி புறப்பட்டுச் சென்றுவிட்டது.

தவற விடப்பட்ட இவ்விரண்டு இராணுவத்தினரும் பின்னர் கடந்த 3ஆம் திகதியன்று விளக்கு வைத்த குளத்தில் எதிர்பாராத விதமாக விடுதலைப்புலிகளைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டது.

அச்சமயம் இவர்கள்மீதுவிடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் இதன்போது ஒரு சிங்கள இராணுவத்தினர் கொல்லப் பட்டார். ஒருவர் தப்பியோடி விட்டார். கொல்லப்பட்ட சிங்கள ராணுவத்தினரிடமிருந்து ரி-56-1 ஒன்றும், மகசின் மூன்றும், ரவை 60, ஜே.ஆர்.கைக் குண்டு ஒன்றும் கைப்பற்றப் பட்டுள்ளன. (ம)

### பஞ்சத்தால் தற்கொலை

(பாரதிபுரம்)

கிளிநொச்சி பாரதிபுரத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான கா. முனியன் பஞ்சம் தாங்கமுடியாது நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

### கோட்டை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த முன்னூற்றி எழுபது ஆண்டுகளுக்கு மேலாக ஈழத் தமிழ் மண்ணை ஆக்கிரமித்த ஆக்கிரமிப்பாளர்களின் நிலைக் களமாக விளங்கி வரும் யாழ். கோட்டையை அழிக்கவும், அங்கு நிலை கொண்டுள்ள சிங்கள ஏகாதிபத்தியப் படைகளை விரட்டியடித்து எமது சுதந்திரத்தை மீட்கவென நேற்று முன்தினம் நள்ளிரவில் புகுந்த போர்க் களத்தில் மரணித்த வீர வேங்கைகளான விக்ரம் (க. தவராசா உடுத்துறை, தாளையடி) எட்ரிஸ் (அ. குமார் என். எம். லேன், பருத்தித்துறை); அலீப் (வே. ஜெயபாஸ்கரன் ரேவடி வல்வெட்டித்துறை): கருணாநிதி (தி. கருணாநிதி தும்பளை, பருத்தித்துறை): ஜேம்ஸ் (ச. எத்திராஜ் நெடியகாடு, வல்வெட்டிததுறை); மோகன் (பா. பாலேந்திரன் சந்தை மேற்கு, பருத்தித்துறை): சுபேசன் (செ. ரஞ்சித் குமார் கே. கே. எஸ். வீதி, வல்வெட்டித்துறை): களடிக் (லே. விஜயகுமார் யாக்கர, கரவெட்டி): நிசாந்தன் (வி. செல்வகுமார் தும்பளை, பருத்தித்துறை); சரத்பாபு (க. அகிலேஸ்வரன் கொக்குவில் கிழக்கு. கொக்குவில்): லோகன் (மு. சுரேஸ் என். எம். லேன், பருத்தித்துறை) டயஸ் (செ. ராஜேந்திரகுமார் இருபாலை, கோப்பாய்): சீலன் (அன்பர், ஊறணி, வல்வெட்டித்துறை) நிசாந்தன் (செ அன்பழகன் ஆவரங்கால் புத்தூர்): அனிபா (வ. உதயகாந்தன் மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி) வசிட்டன் (ச. சுந்தர்ராஜா புத்தூர் கிழக்கு, புத்தூர்) புரட்சி மாறன் (இ தேவசகாயம் நவாலி தெற்கு, மானிப்பாய்): சந்துரு இ. திருமாறன் மண்டான் கரணவாய் தெற்கு கரவெட்டி); பிலிப்ஸ் (கெ. ஜெயசெல்வம் கடியவுலேன், எஸ்டேட். கொத்மலை): நெல்சன் (இ. கெங்காதரன் 43 ஜெயந்திநகர், கிளிநொச்சி) ஜசோதரன் (இருண் ராஜா பம்பைமடு, வவுனியா) பில்லா (எ. ஜேசுநாயகம் வெற்றிலைக்கேணி,) ஜொனி (ஆறுகால்மடம். ஆனைக் கோட்டை) ஆகிய 23 ஆண் போராளிகளுக்கும்,

சங்கீதா, ரூபினி, அனுரா, மாதங்கி, மாதுரி ஆகிய ஐந்து பெண் போராளிகளுக்கும் விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத்தெரிவித்துள்ளனர்.

மண்ணிற்காக மரணித்த வீரர்களின் புகழ் உடல்கள் மக்களின் அஞ்சலிக்காக மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இன்று காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை வைக்கப்படும்.

இறுதியாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித்தலைவர்களின் அஞ்சலி உரைகளை தொடர்ந்து இவ்வீரர்களின் புகழ் உடல்கள் அடங்கிய பேழைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

### ஸ்ரீலங்கா

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ங்கள் தகர்ந்துபோய் உள்ளன. பல மத ஆலயங்கள் நொருங்கிப்போய் உள்ளன நாவலர்வீதி ரெயில்வேகடவையில் நிற்கும் பௌத்தர்கள் போற்றும் அரசமரம் ஒன்று விமானக் குண்டுவீச்சால் கிளைகள் அனைத்தும் முறிந்து தளிர்கள் கருகிய நிலையில் காட்சி தருகிறது.